சுவடிகளைப் பெட்டிகளில் இடல் மற்றும் இராக்கைகளில் அடுக்குவதற்கான நடவடிக்கை எடுத்தல்	*41, 47, 36, 71, 42, 20, 57, 63, 187, 22, 151, 113, 287, 32, 216, 224, 76, 69, 91, 382, 82, 49, 31, 37, 10, 90, 78*
சூசிகைகளை எழுதுதல் மற்றும் கணனிமயப்படுத்தல்	*36,47,22,57,187,63,287,32,113,151,49,216,42,224,91,42,41,382,82, 31,37,10,90,78*
ஆவணப் பரீட்சிப்புப் பட்டியலைத் தயாரித்தல்	*31,47,53,63,71,10,216,224,287,382,41,90,91,199,82,76,92,32,78,18 7,151,113,24,30,28,69,59,37,36,34,49,33,35,42*
உரிய களஞ்சியத்துக்கு ஆவணங்களை மாற்றுதல்	*75,25.198,25.34,25.97,25.80,25.6,234,99,70,55,106,101,77,56, 257,365,352,161,98,370,267,182,62,85,43,45,01,68,26,62.01,107,8 7,64*
பிற களஞ்சியங்களில் இருந்து ஆவணங்களைப் பெறுதல்	*47,49,38,37,36,35,34,33,30,22,20,17,53,57,63,71.1,72,72.1,76,78,8 2,83,91,113,119,160,151,165,199,220,436,275,287,382,41,66*
ஆராய்ச்சி அறைக்கு கிட்டத்தட்ட *830* ஆவணங்களை வழங்குதல்.	
திணைக்கள உத்தியோகத்தர்களின் பாவனைக்காக அண்ணளவாக *200* ஆவணங்களை வழங்குதல்.	
ஆவண வகுதி இலக்கம் *31, 47, 53, 63, 71, 10, 216, 224, 287, 382, 41, 90, 91, 82, 76, 92, 32, 78, 187, 151, 113, 24, 28, 37, 36* மற்றும் *49* இற்கு உரித்தான சகல பணிகளும் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன.	
பாதுகாப்பிற்காக சுமார் *05* ஆவணங்களை அனுப்புதல்.	
சுவடிகளை சுத்தப்படுத்துதல், இராக்கைகளை துப்புறவு செய்தல் மற்றும் களஞ்சியத்தை துப்புரவு செய்யும் நடவடிக்கையை தொடர்ச்சியாக செய்தல்.	



களஞ்சியம்



களஞ்சியம்

6.4 வரைபடப் பிரிவு

2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் வரலாற்று வரைபடங்களின் தொகுப்பு எண்வரிசைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. ஒரு சில வரைபடங்கள் ஒரு பக்கத்திலும் இன்னும் சில வரைபடங்கள் பல பக்கங்களையும் கொண்டிருக்கும். வரைபடங்களின் வகைகளுக்கு ஏற்ப எண்வரிசைப்படுத்தப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

வரலாற்று வரைபடங்கள்	55	மாத்தளை நில வரைபடங்கள்	01
பொதுவான வரைபடங்கள்	50	மாத்தறை நில வரைபடங்கள்	13
காலி நிலவரைபடங்கள்	75	நீர்கொழும்பு நில வரைபடங்கள்	02
கொழும்பு நிலவரைபடங்கள்	140	வட மாகாணம்	20
திருகோணமலை நில வரைபடங்கள்	23	நுவரெலியா	06
பண்டாரவெல நில வரைபடங்கள்	01	வன்னிப் பிரதேசம்	03
மட்டக்களப்பு நில வரைபடங்கள்	03	அகலே நில வரைபடங்கள்	70
கல்பிட்டி நில வரைபடங்கள்	05	Section நில வரைபடங்கள்	478
கிழக்கு கடற்கரையோர நில		மாவட்ட மற்றும் நகர நில வரைபடங்கள்	80
வரைபடங்கள்	03	Resource	01
தேர்தல் நில வரைபடங்கள்	03	இந்தியாவின் நில வரைபடங்கள்	04
அரண்களின் நிலவரைபடங்கள்	110	வான்வழி நிழற்பட வழிகாட்டல் வரைபடங்கள்	76
ஹங்வெல்ல நில வரைபடங்கள்	02	பல்வேறு	40
யாழ்ப்பாணம் நில வரைபடங்கள்	90	RG 58.5 நில வரைபடங்கள்	23
களுத்துரை நில வரைபடங்கள்	04	RG 76	107
கண்டி நில வரைபடங்கள்	11	RG 52	102
கோட்டையின் நில வரைபடங்கள்	02	RG 391/184	99
மன்னார் நில வரைபடங்கள்	02	RG 25.314	02
மாந்தை நில வரைபடங்கள்	01	RG 25.341	10
		RG 25.357	25

வேறு

- வரைபடங்களுக்கு மேலதிகமாக வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் பெறும் ஆவணங்களும் எண்வரிசைப்படுத்தப்படல்

The History of Royal College	*237*
RG 27/638	*163*
RBN catalogue (1910-1913)	*238*

- நில அளவைத் திணைக்களத்தினால் இணைக்கப்பட்ட 3080 நில வரைபடங்கள் பட்டியலிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டு வரைபடப் பிரிவின் புதிய கெபினட்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது மற்றும் அவ்வரைபடங்களை கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.

வரலாற்று வரைபடங்கள்	07
விவசாய நில வரைபடங்கள்	629
அகலே நில வரைபடங்கள்	128
1:50,000 வரைபடங்கள்	208
தேர்தல் நில வரைபடங்கள்	87
நகர மதிப்பீட்டு நில வரைபடங்கள்	1499
நிர்வாகப் பிரிவுகளின் நில வரைபடங்கள்	33
காணிப் பதிவுப் பிரிவுகளின் நில வரைபடங்கள்	36
பொதுவான வரைபடங்கள்	153
வான்வழி வரைபடங்கள்	189
காடுகளைக் காட்டும் நில வரைபடங்கள்	66
உலக வரைபடங்கள்	02



i2s Super Scanner இயந்திரம்

- சுவடிகள் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள வான்வழி நிழற்படங்களை அடையாளங் காண்பதற்கான 76 வரைபடங்கள் நில அளவைத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் எண்வரிசைப்படுத்தல் செய்யப்பட்டுள்ள வரைபடங்கள் சுவடிகள் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

- களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த காணி நிர்ணய திணைக்களத்தின் வரைபடங்களின் தூசிகளை அகற்றி வரைபடப் பிரிவிற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- பொது ஆய்வாளர்களுக்காக எண்வரிசைப்படுத்தப்பட்ட வரைபடங்களின் பிரதிகளை வழங்குதல்

- 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட i2s Super Scanner இயந்திரத்திற்கான சேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சஞ்சய தனியார் நிறுவனத்தினால் இவ்வருடத்தில் மேற்கொள்ளல்.



வரைபடங்களின் தொகுப்பு

7. கல்வி, பயிற்சி, விளம்பரப் பிரிவு

7.1 கல்வி

7.1.1 கண்காட்சி

தொடரிலக்கம்	திகதி	கண்காட்சியின் பெயர் மற்றும் இடம்
i	2018 மார்ச் மாதம் 07 மற்றும் 08 ஆந் திகதிகளில்	சிறிமாவோ பண்டாரநாயக வித்தியாலயத்தில் நடைபெற்ற " விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் கல்வி கண்காட்சி" இற்காக கண்காட்சிக் கூடமொன்றை அமைத்தல்
ii	2018 ஏப்ரல் 26 தொடக்கம் மே 02 ஆந் திகதி வரை	குருணாகல் பிங்கிரிய தேவகிரி ரஜமகா விகாரையில் நடைபெற்ற " ஹெல பொது கலா அசிரிய" கண்காட்சியில் கண்காட்சிக் கூடமொன்றை அமைத்தல்
iii	2018 ஏப்ரல் 29 தொடக்கம் மே 03 ஆந் திகதி வரை	அலரி மாளிகையில் நடைபெற்ற "புத்த ரஷ்மி தேசிய வெசக் விழா" கண்காட்சியில் கண்காட்சிக் கூடமொன்றை அமைத்தல்.
iv	2018 ஒக்டோபர் மாதம் 01 மற்றும் 02 ஆந் திகதிகளில்	ருவன்வெல்ல பிரதேச சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற "உலக சிறுவர் தின ரன்வெலி விழா - 2018" இல் கண்காட்சிக்காக கண்காட்சிக் கூடமொன்றை அமைத்தல்
v	2018 நவம்பர் மாதம் 02 ஆந் திகதி முதல் தொடக்கம் 04 ஆந் திகதி வரை	வலஸ்முல்ல தேசிய பாடசாலையின் வளாகத்தில் நடைபெற்ற " தேசிய இலக்கிய கலை விழா -2018" இன் கண்காட்சியில் கண்காட்சிக் கூடமொன்றை அமைத்தல்

7.2 பயிற்சி

7.2.1 அரச ஆவணங்களின் நிர்வாகம் மற்றும் சுவடிக்காப்பகச் சட்டம் தொடர்பான ஒரு நாள் பாடநெறி

அரச நிறுவனங்களில் நிறைவேற்று தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்ற இப்பாடநெறியின் மூலம் அரச ஆவணங்களின் முகாமைத்துவம் மற்றும் சுவடிக்காப்பக சட்டம் தொடர்பான அறிவு வழங்கப்படும். 2018.03.20, 2018.08.28 மற்றும் 2018.09.11 ஆந் திகதிகளில் 03 பாடநெறிகள் நடாத்தப்பட்டன. தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நதீரா ரூபசிங்க, உதவிப் பணிப்பாளர் (அ.பொ.) திருமதி. ஆர்.சீ.ஆர். பிரியங்கனீ அவர்கள், திருமதி. உதவி சுவடிக்காப்பாளர் திருமதி. திலினி லியனகே அவர்கள், உதவி சுவடிகள் காப்பாளர் திருமதி. ஹிமாலி வீரகோன் அவர்கள், பிரதான ஆவணக் காப்பாளர் (காப்பக) (அ. பொ.) திருமதி. கே.எச். அஷோகா அவர்கள் மற்றும் காப்பக பராமரிப்பு கண்காணிப்பு உத்தியோகத்தர் திரு. நிஹால் பின்தெனிய அவர்கள் இதில் உரைகளை நிகழ்த்தினார்கள். இந்தப் பாடநெறிக்காக 204 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

7.2.2 சுவடிகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐந்து நாள் பயிற்சி

ஆவணம்முகாமைத்துவமற்றும்பாதுகாப்பு தொடர்பானஐந்து நாள்பாடநெறி அமைச்சுக்கள்/ திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் உள்ள முகாமைத்துவ உதவியாளர் சேவையின் மற்றும் அதற்கு மேற்பட்ட நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்களுக்காகவும் நடாத்தப்பட்டது. 2018 வருடத்தில் ஆவண முகாமைத்துவம் தொடர்பான ஐந்து நாள் பாடநெறிகள் நான்கு நடாத்தப்பட்டன. அதற்கமைய, 2018.03. 2018.03.09 வரையும், 2018.05.14 தொடக்கம் 2018.05.18 வரையும், 2018.08.13 தொடக்கம் 2018.08.17 வரையும் 2018.10.15 தொடக்கம் 2018.10.19வரையும் அப்பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன. தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நதீரா ரூபசிங்க, உதவிப் பணிப்பாளர் (அ.பொ.) ஆர்.சீ. ஆர். பிரியங்கனீ அவர்கள், உதவி சுவடிகள் காப்பாளர் திருமதி. திலினி லியனகே அவர்கள், உதவி சுவடிகள் காப்பாளர் திருமதி. ஹிமாலி வீரகோன் அவர்கள், ஓய்வு பெற்றுச் சென்ற உதவி சுவடிகள் காப்பாளர் ஜோசப் பெட்ரிக் பீரிஸ் அவர்கள், உதவி சுவடிகள் காப்பாளர் திருமதி. சுமனா அமரசிங்க அவர்கள், உதவி சுவடிகள் காப்பாளர் திருமதி. சுனீதா குருகே அவர்கள், உதவி சுவடிகள் காப்பாளர் திருமதி. ஷிராணீ பெட பெதி அவர்கள், உதவி சுவடிகள் காப்பாளர் திருமதி. சௌமியா சேனரத் அவர்கள், பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (காப்பக) (அ. பொ.) திருமதி. கே.எச். அஷோகா அவர்கள் போன்ற உத்தியோகத்தர்கள் ஆவண முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விரிவுரைகளை நடாத்தினார்கள். அத்தோடு, பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (காப்பக) (அ. பொ.) திருமதி. கே.எச். அஷோகா அவர்கள், உதவி ஆவண மீள்பதிப்புக் கலைஞர் திரு. தனு எகொடவத்த அவர்கள், செவிப்புல -கட்புல தொழில்நுட்பவியலாளர் திரு. டீ. டீ. ஜயரத்ன அவர்கள் போன்ற உத்தியோகத்தர்கள் பிரயோகப் பயிற்சியின் மூலம் கருத்தரங்கினை நடாத்தினார்கள். 2018 ஆம் ஆண்டு இந்தப் பாடநெறிக்காக 285 அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

7.2.3 புத்தகம் கட்டுதல் தொடர்பான பயிற்சிப் பாடநெறிகள்

2018 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் போன்ற அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பு நிறுவனங்கள் அலுவலக பணியாளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு புத்தகம் கட்டுதல் தொடர்பான 30 நாட்களைக் கொண்ட 5 பாடநெறிகள் நடாத்தப்பட்டன. இப்பயிற்சியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற தொழில்நுட்பப் பிரிவின் உத்தியோகத்தர்களால் பயிற்சி நடவடிக்கைகள் நடாத்தப்பட்டதுடன் இப்பாடநெறியில் 85 பேர் கலந்து கொண்டனர்.



புத்தகம் கட்டும் பாடநெறிகள்

7.2.4 உள்ளூராட்சி நிர்வாக ஆவணம் முகாமைத்துவச் செயலமர்வு



மாநாடுகள் மற்றும் துவக்க விழாக்கள்

"உள்ளூராட்சி ஆவண முகாமைத்துவம்" என்ற தொனிப்பொருளின் கீழ் இத்தடவை மாநாடுகள் மற்றும் துவக்க விழாக்களை திணைக்களம் செப்டம்பர் மாதம் 06 மற்றும் 07 ஆந் திகதிகளில் உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. இச் செயலமர்வின் வளவாளர்களாக இங்கிலாந்தின் டண்டன் மெட்ரோ பொலிடன் சுவடிகள் கூடத்தின் லோரா டேய்லர் *(Laura Taylor)* மற்றும் நெதர்லாந்தின் ரோடர்டேம் நகர சபையின் கலாநிதி பார்ட் பலோக்ஸ் *(Bart Ballaux)* உம் கலந்து கொண்டார். அத்தோடு இதற்காக சர்வதேச சுவடிக்காப்பாளர் கவுன்சிலின் உதவியும் இலங்கை தேசிய சுவடிகள் கூடத்துக்கு கிடைக்கப்பெற்றது.

அங்கு நடாத்தப்பட்ட உரைகள் -

- *Observations on records management in Municipal Councils and Urban Councils in Sri Lanka – Ms. Chamila Rajapathirana, Assistant Director (AtD)*
- *Management of traditional historical archives – Ms. Laura Taylor*
- *Implementing an electronic work (and records management) environment: how to make it work – Dr. Bart Ballaux*
- *Metadata, classification and appraisal in an electronic environment - Dr. Bart Ballaux*
- *Paper Records Management at London Metropolitan Archives & crating reyention schedules - Ms. Laura Taylor*
- *Records disposal, sensitive records, personal information - Ms. Laura Taylor*
- *Steps in creating a retention schedule - Dr. Bart Ballaux*

பத்தொன்பதாம் நூற்றாண்டில், பிரித்தானியர்களினால் 1865 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப வினைத்திறனான நிர்வாக முறைமையை ஏற்படுத்தி பயனுறுதி மிக்க மக்கள் சேவையை வழங்கும் நோக்கில் கொழும்பு, கண்டி மற்றும் காலி நகரங்களில் மாநகர சபைகள் ஆரம்பிக்கப்பட்டன.இதன்மூலம் பாதைகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு செய்தல், தெரு விளக்குகள், நீர் வழங்கல், பொதுச் சுகாதாரச் சேவைகள், சுகாதாரம் மற்றும் வர்த்தக வசதிகளை வழங்குவதோடு, இந்த மாநகர சபைகளுக்கு உரித்தான ஆவணங்கள் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் பாரம்பரிய ஆவணங்களைப் போன்றே மின்னணு மற்றும் டிஜிட்டல் ஆவணங்களின் முகாமைத்துவம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளதோடு, உள்ளூராட்சி ஆவண முகாமைத்துவம் தொடர்பான நிபுணத்துவ அறிவுள்ள வெளிநாட்டு நிபுணர்கள் இருவரின் பங்கேற்பு இந்நிகழ்ச்சிக்கு பெரும் உதவியாக இருந்தது. ஆவண முகாமைத்துவ விடயப்பரப்புக்கு உரித்தான சுவடிகள் மதிப்பீடு, தேவையற்ற ஆவணங்களை அழித்தல், தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி நிரந்தர பாதுகாப்பிற்காக தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தால் ஆவணங்களை இணைப்புச் செய்தல், பொது மக்களுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள ஆவணங்களை அணுகுவதற்கான செயல்முறை என்பனவும் அத்தலைப்பின் கீழ் கலந்துரையாடப்பட்டன.இது 2016 ஆம் ஆண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உதவியுடன் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் ஆவண முகாமைத்துவம் மற்றும் ஆவணக் கூடங்கள் பற்றி வினாக்கொத்து மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.



மாநாடுகள் மற்றும் துவக்க விழாக்கள்

இம்மாநாடுகள் காப்பக உத்தியோகத்தர்களைப் போன்றே நாட்டின் உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எதிர்கால முயற்சிகளுக்கான சிறந்த தொடக்கமாக அமைந்தது.இரண்டு நாட்களைக் கொண்ட இம்மாநாட்டிற்கு உள்ளூராட்சி ஆவண முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச வல்லுநர்கள் இருவரின் பங்களிப்பு விலைமதிப்பற்ற பிரயோசனமாக அமைந்தது. ஆவண மதிப்பீடு, ஆவணங்களை தவறாகக் கையாளுதல், சில சட்டவிதிகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் நிரந்தரப் பாதுகாப்பிற்காக பெறுமதியான ஆவணங்களை இணைத்தல் மற்றும் அகற்றல் அட்டவணையைத் தயாரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.இலங்கையில் இருந்து பங்குபற்றியவர்களுடன் அவர்களின் அறிவு

மற்றும் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள முடியுமாக இருந்தது. உள்ளூராட்சி ஆவணங்களை முகாமைத்துவம் செய்வதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக கலந்துரையாட பங்கேற்பாளர்களுக்கு ஒரு தளம் திறக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் ஆவணங்களின் உருவாக்கம் தொடக்கம் அகற்றும் வரை அவசியப்படும் அடிப்படை அறிவு மற்றும் திறன்களைப் பெற பங்கேற்பாளர்களால் முடிந்தது.

7.3 விளம்பரங்கள்

திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகம் மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு அறிவூட்டும் செயற்பாடு இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை வழங்கல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை செயல்படுத்தல் மற்றும் தேசிய சுவடிகள் கூடத்தின் பணிகள் தொடர்பாக செவிப்புல மற்றும் கட்புல நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1978 ஆம் ஆண்டில், சர்வதேச சுவடிகள் காப்பக கவுன்ஸிலால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு ஏற்ப ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார நிறுவனமான (UNESCO) வில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் தேசிய சுவடிக்காப்பக வாரத்தை நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 1979 ஆம் ஆண்டு முதல் தேசிய சுவடிகள் காப்பக வாரம் இலங்கையில் நடாத்தப்பட்டு வந்துள்ளதோடு, அதன்பின்னர் இலங்கை தேசிய சுவடிகள் கூடம் " தேசிய சுவடிகள் காப்பக வாரம்" ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் அல்லது அதற்கு கிட்டிய வாரமொன்றில் நடாத்தப்பட்டது.

திணைக்களத்தின் பிரதான கட்டிடத்தின் இத்துப்போனகொன்கிரீட் பின்ஸ் காரணமாக 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் அதன் பிரதான நுழைவாயிலை மூடி வைக்கப்பட்டுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒருசில கொன்கிரீட் பின்ஸ்கள் திடீரென தரையில் இடிந்து விழுந்தன. அதன் அபாயம் கருதி, இத்துப்போன கொன்கிரீட் பின்ஸ்களை கழற்றி அகற்றி விட்டு கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்யும் நடவடிக்கையை விரைவில் துவங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சுவடிகள் காப்பக வாரத்தினை நடாத்துவதற்குப் பதிலாக இரண்டு நாட்களில் மேற்குறிப்பிட்ட உள்ளூராட்சி ஆவண முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு மற்றும் துவக்க விழாவை நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது.

8. விசேட திட்டங்கள்

8.1 சூசிகைகளை கணனிமயப்படுத்தும் திட்டம்

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள சூசிகைகளை கணனிமயப்படுத்துவதற்காக 2016 ஜூன் மாதம் 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கணனிமயப்படுத்தப்பட் சூசிகைகளின் எண்ணிக்கை 777 ஆகும். இச்சூசிகைகளை கணனிமயப்படுத்தல் தரவுகளை உள்ளீடு செய்யும் நடவடிக்கை உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. திணைக்களத்தின் ஓய்வு பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர்கள் இருவரினால் இத்தரவுகள் பரீட்சிக்கப்பட்டு திருத்தம் செய்து அடையாளம் இட்டதன் பின்னர்

அத்தரவுகள் உள்ளீடு செய்யும் உத்தியோகத்தர்களினால் மீள நிவர்த்தி செய்யப்படும். அதன்பின்னர் ஆலோசகர் ஒருவரினால் இறுதி பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும்.
இத்திட்டத்தின் ஆலோசகராக இருந்த ஓய்வு பெற்ற தேசிய சுவடிகள் காப்பக பணிப்பாளர் கலாநிதி கே. டீ. ஜீ. விமலரத்ன அவர்கள் நோய்வாய்ப்பட்டதாலும், 2018 ஆம் ஆண்டில் அவர் காலமானதாலும் இந்த ஆண்டு அவரது ஆலோசனைச் சேவைகள் இழக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற தேசிய சுவடிகள் கூட பிரதிப் ணிப்பாளர் கலாநிதி கே.டீ. பரணவிதான அவர்கள் தொடர்ந்தும் ஆலோசனைச் சேவைகளை வழங்கி வருகின்றார். சூசிகைகளை பரீட்சித்துப் பார்ப்பதற்காக திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பதவிநிலை உத்தியோகத்தரான திருமதி. சீ.ஜே. மஹரகே அவர்கள் மற்றும் திருமதி வசந்தி எகொடவத்த அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதோடு இத்திட்டம் தொடர்ந்தும் செயற்பாட்டில் உள்ளது.

9. கணனிப் பிரிவு

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின்கணனி பிரிவு திணைக்களத்தின் இணையத்தளம், வைரஸ் மென்பொருளைஇற்றைப்படுத்தல்கணனி, வலையமைப்பை பராமரித்தல் மற்றும் தினசரிதிணைக்களத்தின்கணனி சார்ந்து எழும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதனையும் மேற்கொள்கின்றது.அத்தோடு, Times திட்டத்தின் மூலம் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள தரவுகளை இற்றைப்படுத்தி பேணிச் செல்வதற்காக தொடர்ச்சியாக கணனி உதவியை வழங்கி அவசியப்படும் சந்தர்ப்பங்களில் அத்தரவுகளை மீளப் வழங்கும் செயற்பாடும் நடைபெறுகின்றது.கணனி பாகங்களை கொள்வனவு செய்யும் குழுவின் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் கணனிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுள் உள்ளடங்குகின்றன.

10. புகைப்படமெடுத்தல் மற்றும் நுண் புகைப்படமாக்கல் பிரிவு

இப்பிரிவினால் திணைக்களத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பௌதீக ரீதியில் பலவீனமடைந்துள்ள ஆவணங்கள் மற்றும் ஏனைய அத்தியவசியப்படும் சுவடிகளை நுண் புகைப்படமாக்கல் மேற்கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் புகைப்படமெடுத்தல் நடவடிக்கையினை இப்பிரிவு மேற்கொள்கின்றது. மேலும், பொது மக்களின் தேவைப்பாட்டுக்கு ஏற்ப டிஜிட்டல் கெமராவினைப் பயன்படுத்தி பல்வேறு சுவடிகளின் பிரித்தெடுப்புக்கள் இப்பிரிவினால் எடுக்கப்படுகின்றது. இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் பற்றி விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

பத்திரிகையின் பெயர்	நேரம்	வெளிப்படுத்தல்
சிலோன் டெய்லி நிவுஸ் (பழைய)	1949.10.01 - 1952.12.31	58,200
டெய்லி நிவுஸ் (புதிய)	2017.10.01 - 2018.09.30	
மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப டிஜிட்டல் கெமராவினால் பிரித்தெடுப்புக்களை வழங்குதல்.		15,790

11. ச்11. செவிப்புல கட்புலப் பிரிவு

சுவடிகள் கூடத்துக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள காந்த நாடாக்கள், ஒளிப் பேழை , சலனத் திரைப்படம், ஒலி நாடாக்களை எண்வரிசைப்படுத்தல், பரீட்சித்தல், சுத்தப்படுத்தல் மற்றும் நுண் திரைப்படமாக்கல் என்பன இலக்கமிட்டு ஒழுங்கில் வைத்தல், பரீட்சித்தல், பொது மக்கள் மற்றும் ஆராய்ச்சித் தேவைகளுக்காக ஆராய்ச்சி அறையை வழங்குதல் மற்றும் ஆராய்ச்சித் தேவைக்கிணங்க அவற்றின் பிரதிகளை வெளியிடுதல் போன்ற பணிகள் செவிப்புல கட்புலப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் பற்றி விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.



செவிப்புல கட்புலப் பிரிவு

11.1 செவிப்பு கட்புல ஆவணங்களைப் பாதுகாத்தல்

i. கீழே குறிப்பிடப்பட்டுள்ள காந்த நாடாவை வாராந்தம் ஒரு தடவை பரீட்சித்துப் பார்த்தல், சுத்தம் செய்தல் மற்றும் மீள மடித்தல்

- 25.86/S.M.T/01, 03-169 வரை
- 73/.M.T/-59, 61 தொடக்கம்83, 93, 94, 101 தொடக்கம் 123, 139-155, 157-162, 164, 165, 167-193
- 25.147/S.M.T/01-16
- 25.286/S.M.T/257-265

- 108 3/S.M.T/24, 25, 26, 27

ii. சனாதிபதி ஆணைக்குழு Lot No - 405, 433, 405, 454, 456, 457, 460, 77 (ஒலி நாடாக்கள்) A.C மீள மடித்தல் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் Lot No - 580, 623, 640, 641, 384, 335, 658 (ஒலி நாடாக்கள்) A.C மீள மடித்தல் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் / விபரங்களை குறித்துக் கொள்ளல்.

iii. திரைப்படக் கூட்டுத்தாபனத்திலிருந்து வருகை தரும் உத்தியோகத்தர்களைக் கொண்டு Positive திரைபடங்கள் 160 உம், Negative(Picture & Sound) திரைப்படங்கள் 42 உம் மீள மடிக்கச் செய்தல்.

iv. திரைப்பட சுவடிகள் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள சகல திரைப்படங்களினதும் பிரதிகள் ஒழுங்கு முறையில் இலக்கம் மற்றும் பெயர்களை உள்ளடக்கி இராக்கையில் வைத்தல்.

v. ஒளிப் பேழைகளுக்கு (VHS) 50 இனைப் பரீட்சித்துப் பார்த்தல், சுத்தம் செய்தல் மற்றும் மீள மடித்தல்

vi. நுண் திரைப்படங்கள் 3000 இனைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் மீள மடித்தல்.

vii. செவிப்புல கட்புல நாடகாக்களைப் பரீட்சித்துப் பார்த்தல், சுத்தம் செய்தல் மற்றும் மீள மடித்தல்

11.2 செவிப்புல கட்புல ஆவணங்களை இணைப்புச் செய்தல்

i. ஆவணங்களை இணைப்புச் செய்யும் பிரிவிடமிருந்து கிடைக்கப்பெறும் நாடாக்களை பொறுப்பேற்றல். (CD – 72, DVD – 15, Blu ray – 190, Pen Drive – 02)

ii. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நைட்ரேட் திரைப்படமொன்று இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. (News Reel)

iii. தனியார் இணைப்புக்களாக D.B.திரு. நிஹால்சிங்க அவர்களின் வெலிகதர திரைப்படம் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

11.3 செவிப்புல கட்புல ஆவணங்களை பொது மக்களின் பயன்பாட்டுக்காக வழங்குதல்.

i. 777 நுண் திரைப்படங்கள் தேடுதல் அறைக்கு வழங்குதல் மற்றும் 780 நுண் திரைப்படங்களை தேடுதல் அறையிலிருந்து மீள பெற்று உரியவகையில் வைப்புச் செய்தல்.

ii. நுண் திரைப்படமாக்கல் 13 வேலை அலகுகள், 75கணனி மூலப்படப் பிரதி வேலை அலகுகள், CD பிரதிகளை நிறைவு செய்து பொதுத் தொடர்பாடல் பிரிவிடம் ஒப்படைத்தல்.

iii. ஆராய்ச்சிக்காக நாட்டுப்புற இசையை கேட்பதற்காக வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அறிஞர்கள் நாட்டார் பாடல்களை கேட்கவும் பிரதிகளை எடுத்து கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

iv. செவிப்புல கட்புல ஆவணப் பயன்பாட்டுக்காக 168 ஆய்வாளர்கள் வருகை தந்துள்ளார்கள் என்பதோடு வழங்கப்பட்டுள்ள செவிப்புல மற்றும் கட்புல (reel) களின் எண்ணிக்கை 777 ஆகும்.

11.4 திரைப்பட எண்வரிசைப்படுத்தல்

திரைப்பட சுவடிகள் கூடத்தின் எண்வரிசைப்படுத்தல் நடவடிக்கை 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 2018 திசெம்பர் மாத இறுதியில் 237 திரைப்படங்களை எண்வரிசைப்படுத்தல் செய்துள்ளது. இந்த எண்வரிசைப்படுத்தல் செய்யப்பட்டுள்ள திரைப்படங்கள் blu-ray யில் பதிவு செய்யப்பட்டு காப்பகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. திரைப்பட எண்வரிசைப்படுத்தலுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள 237 திரைப்படங்களில் 104 திரைப்படங்கள் 2017 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்பட்டுள்ளதோடு, எஞ்சிய 133 திரைப்படங்களும் 2018 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்படவுள்ளது.

இங்கு திரைப்படத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள காப்பக இலக்கம், படத்தின் ஆரம்பம், அதன் முடிவு , ஒலி , திரைப்படத்தின் தொடர் ஓட்டம் என்பனபற்றி ஆராயப்படுகின்றன. Blu-ray செய்யப்பட்ட 237 திரைப்படங்களுக்கான மெட்டா தரவு (metadata) தகவல் சூசிகையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சூசிகையில் திரைப்படத்தின் காப்பக இலக்கம், காலம், நடிகர் நடிகைகள், தயாரிப்பு, இயக்குநர்கள் போன்றோரின் தகவல்கள் உள்ளடங்கியிருக்கும். திரைப்பட காப்பக கூடத்திற்குச் சொந்தமான 378 திரைப்படங்களுக்கு சூசிகை தயாரிக்கப்பட்டுள்ளது.



திரைப்படக் காப்பகக் கூடம்

11.5 ஏனையவை

i. செவிப்புல கட்புலப் பிரிவில் உள்ள சகல உபகரணங்களினதும் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லல்.

ii. ஐந்து நாள் கொண்ட பாடநெறி மற்றும் புத்தகம் கட்டும் பாடநெறியைக் கற்பவர்களுக்கு செவிப்புல கட்புலப் பிரிவு தொடர்பான விழிப்பூட்டல் செய்தல்.

iii. பல்கலைக்கழக மாணவர்களுக்காக இரண்டு நாள் செவிப்புல கட்புலப் பிரிவு தொடர்பான விழிப்பூட்டல் செய்தல்.

iv. தேசியசுவடிகள் காப்பக திணைக்கள கேட்போர்கூடம் மற்றும் மாநாட்டு மண்டபத்தின் பணிகளை நிறைவேற்றல்.

12. தொழில்நுட்பப் பிரிவு

12.1 ஆவண மீள்நிலைப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்

சுவடிகள் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் பாதுகாப்பு மற்றும் மீள்நிலைப்படுத்தல் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதோடு ஆவண பாதுகாப்பாளர்களின் அளவு மிகவும் குறைவாக, அதாவது 06 பேராக மாறியதால் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மட்டுப்படுத்தப்பட்டன.

பாதுகாப்புப் பணிகள்	**பாதுகாக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை**
இரசாயன நச்சு நீக்கம்	3409
முழுமையான மீள்நிலைப்படுத்தப்பட்டுள்ள	3409
அரைவாசி மீள்நிலைப்படுத்தப்பட்டுள்ள	--
முதலுதவி	--
வெட்டுக்கள்	20150
பாதுகாப்பு கீற்றுக்களைப் பயன்படுத்தல்	288
அங்குலத்திற்கு வளைத்தல்	98
பாகங்களைத் தைத்தல்	19800
வரிவுப் பிணைப்பிடல்	3800
பக்கவாட்டு இலை உருவாக்கம்	1256
புத்தகம் கட்டுதல்	2018
முழுமையாக மீள்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிகள்	11
அரைவாசி மீள்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிகள்	--
தங்க முலாம் பூசப்பட்ட புத்தகங்கள்	636
நாடாக்களைக் கட்டுதல்	152
நாடாக்களை மீள்நிலைப்படுத்தல்	04
நிலையாகக் கட்டுதல்	1500
கீல் அட்டைகளை தயாரித்தல்	84
செய்தித்தாள்களைக் கட்டுதல்	320
நூலகப் புத்தகங்களைக் கட்டுதல்	30

பாதுகாப்புப் பணிகள்	பாதுகாக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை
நூலகப் புத்தகங்களை மீள்நிலைப்படுத்தல்	03
பெட்டிகள்	125
சூசிகைகள்	5000
Folders	06
தைமோல் புகையேற்றம்	18
பொஸ்பீன் புகையேற்றம்	--
ஆவணக் கோப்பு மூடு உறை	84
டமி மேல் உறை	84
Dockets	07
Flags	13000
லெஜர்	85
வரைபடங்கள்	03
ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல்	69860
ஓலைச் சுவடிகளுக்கு நூலிடல்	1922
பன்சல் கடமைகள்	10
புத்தக கட்டுநர்களுக்கு பயிற்சியளித்தல்	84
ஏனைய கடமைகள் (வழிபாட்டுத் தலங்களில் அச்சிடப்பட்ட புத்தகங்களைப் பாதுகாத்தல்)	14565

12.2 தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய நிறுவனங்கள்

இப்பிரிவின் மூலம் அமைச்சுக்கள், திணைக்களங்கள் போன்ற அரச நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களைப் போன்றே தனியார் நிறுவனங்களினதும் ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதோடு மத நிறுவனங்களில் உள்ள ஆவணங்களின் பாதுகாப்பும் மேற்கொள்ளப்படுகிறது. இப்பிரிவு சர்வதேச தரத்திற்கு ஏற்ப ஒரு ஆவண அறையை தயார் செய்து கொள்ளல், ஒரு நிறுவனத்தின் ஆவணங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பதைப் போன்றே ஆவண அறையைப் பராமரிப்பது தொடர்பான ஆலோசனையும் வழங்குகின்றது. அத்தோடு, இவ்வாண்டினுள் தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய நிறுவனங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

தொடரிலக்கம்	நிறுவனங்கள்	அளவு
i.	திணைக்களங்கள்	12
ii.	இராணுவம்	04

தொடரிலக்கம்	நிறுவனங்கள்	அளவு
iii.	நகர சபைகள்/பிரதேச செயலகங்கள்	08
iv.	நியதிச் சட்டசபை நிறுவனங்கள்	11
v.	தனியார் நிறுவனங்கள்	06

12.3 வழிபாட்டுத் தலங்களின் பதிவேடுகளைப் பாதுகாத்தல்

இலங்கையின் புராதன விகாரைகளில் வைக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாப்பது இத்திணைக்களத்தினால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியாகும். இவ்வாண்டில், 10வழிபாட்டுத் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புப் பணிகளின் பலனில் 699860 ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.



தொழில்நுட்பப் பிரிவு



ஆவணக் காப்பகப் பராமரிப்பு

13. ஆராய்ச்சி அறை

கொழும்பு 07, பிலிப் குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள பிரதான அலுவலகம், கண்டி பழைய நீதிமன்ற கட்டிடத் தொகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள கிளைக் காரியாலயத்திலும் ஆராய்ச்சிக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இவ்வருடத்தினுள் பிரதான கிளைக்கு ஆராய்ச்சி நடவடிக்கைக்காக 3163 ஆய்வாளர்கள் வருகை தந்துள்ளார்கள் அத்தோடு அவர்களுக்காக 1410 ஆவணங்களும், 1547 செய்தித்தாள்களும், 756 புத்தகங்களும், 71 வரைபடங்களும், 777 நுண் திரைப்படங்களும், 39 புகைப்படங்கள் மற்றும் செய்தித்தாள்களின் வெட்டுக்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்குமேலதிகமாக**ஆவணம் முகாமைத்துவம் மற்றும்பராமரிப்பு தொடர்பான பயிற்சித் திட்டங்கள் மற்றும் புத்தகம் கட்டுதல் தொடர்பான பயிற்சித் திட்டங்களுக்காக பங்குபற்றி உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி அறை தொடர்பான விழிப்பூட்டும் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.**

ஆராய்ச்சி அறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் வகையில் ஆராய்ச்சி அறையின் பயன்பாட்டிற்கான சட்டவிதி ஆலோசனைத் தொடரொன்று வெளியிடப்பட்டுள்ளதோடு, ஆவணங்களை வழங்கும் பதிவேடு ஒழுங்கு முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு

மேலதிகமாக ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் ஆராய்ச்சி அறைக்கு முன்பாக நிறுத்தப்பட்டு, வாசகர் அனுமதி வழங்கலின் போது செல்லுபடியாகும் அடையாள அட்டையின் பிரதியொன்றைப் பெறுவது போன்ற செயல்முறையைத் தொடங்கியுள்ளார்.

மேலும், எண்வரிசைப்படுத்தப்பட்ட டைம்ஸ் புகைப்படங்கள் மற்றும் பத்திரிகைகளின் வெட்டுக்களின் தொகுப்பிற்கு அணுகுவதற்கான வசதிகள் ஆராய்ச்சி அறையில் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

14. பொது மக்கள் தொடர்பாடல் பிரிவு

பொது மக்களுக்கான தொழில்சார் சேவை தொடர்பாடல்களை அடிப்படையாக பேணிச் செல்வது இப்பிரிவின் மூலமாகும். பிரித்தெடுப்புப் பாகப் பிரதிகளை சான்றுப்படுத்தல், அழைப்பாணையின் அடிப்படையில் நீதிமன்றத்துக்கு பதிவேடுகளின் பிரித்தெடுப்பு தொடர்பாக சாட்சியமளிக்கும் நடவடிக்கைக்கு ஒருங்கிணைப்புச் செய்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப ஆவணங்களில் இருந்து தகவல்களை தேடும் நடவடிக்கையைப் பொறுப்பேற்றல் மற்றும் அவற்றின் பிரித்தெடுப்புப் பாகங்களை வழங்குதல், ஆய்வாளர்களுக்கு வாசிப்புக்கான அனுமதி அட்டைகளை வழங்கல், ஆய்வுகளின் தேவைகளுக்கு ஏற்ப உரிய விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு ஆவணங்களின் பிரித்தெடுப்புக்களை வழங்குதல் போன்ற பணிகளை இப்பிரிவின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

தொடரிலக்கம்	விண்ணப்ப வகை	கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	வெளியிடப்பட்ட எண்ணிக்கை
i	அரச சன்னஸ் மற்றும் மானியங்கள்	559	581
ii	தானிய வரி	143	114
iii	உத்தியோகபூர்வ பங்குகள், மரபணு பங்குகள் மற்றும் ஆணையாளர் குறிப்புகள்	107	78
iv	விகாரை மற்றும் தேவாலங்களின் காணிகள்	56	50
v	தோம்பு	56	48
vi	வாக்காளர் பட்டியல்கள்	745	705
vii	அரசின் வர்த்தமானிகள்	1171	1165
viii	ஆவணப் பிரதிகளை சான்றுப்படுத்தல்	225	225
ix	உள்நாட்டு விசாரணைகள் (இதர)	81	51
x	வெளிநாட்டு விசாரணைகள் (இதர)	06	03
xi	கணனிப் பிரதி எடுத்தல்	678	606

14.1 ஆவணங்களின் சான்றிழ் பிரதிகளை வழங்குதல்

இந்தப் பிரிவினால் பொதுமக்கள் மற்றும் அரசு மற்றும் அரச சார்பு நிறுவனங்களின் தேவைகளுக்காக ஆவணங்களின் சான்றிளிக்கப்பட்ட பிரதிகளை வழங்கப்படுகின்றது. பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப ஒல்லாந்தர் தோம்புகளின் மொழிபெயர்ப்பு, வாக்காளர் பெயர்ப் பட்டியல்கள், அரசாங்க வர்த்தமானிகள், செய்தித்தாள்கள், அரசாங்க முத்திரையிடப்பட்ட பத்திரங்கள், மன்னனால் வழங்கப்பட்ட காப்புரிமைப் பட்டயம், தானிய குத்தகை ஒப்பந்தப் பதிவேடு, போன்றவற்றின் சான்றுப் பிரதிகளை வழங்குவதோடு, வெளியீடுகள் மற்றும் வெகுசன ஊடகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பல்வேறு சான்றுப் பிரதிகளை வழங்குதல்.

14.2 நீதிமன்றச் செயற்பாடுகள்

நாடளாவிய ரீதியில் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்கள் வழங்கிய அழைப்பாணைகளின்படி, ஆவணங்களின் பிரதிகள் மற்றும் மூலப் பிரதிகள் சாட்சியங்களாக முன்வைக்கப்படுகின்றன மற்றும் வாய்மொழி சான்றுகள் இத்திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்படுகின்றன.

14.2.1 நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக பிரித்தெடுப்புக்களை வழங்குதல்

விடயம்	**தடவைகளின் எண்ணிக்கை**
வாக்காளர் பட்டியல்கள்	37
அரசின் வர்த்தமானிகள்	01
தானிய குத்தகைப் பதிவேடு	01
சேனைப் பட்டியல்	01
பத்திரிகைகள்	04
காப்புரிமைப் பட்டயம்	03
உத்தியோகபூர்வ பங்குகள்	01
விகாரை மற்றும் தேவாலயங்களின் காணிகள்	02

14.3 பிரதியெடுத்தல் அறை

பொது மக்களின் கோரிக்கைகள், ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தேவைப்பாட்டுக்காக காப்பகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை வழங்கும் செயற்பாடு இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. திணைக்களத்தினால் நடாத்தப்படும் கண்காட்சிகளுக்கு அவசியப்படும் செய்தித்தாள்களின் பிரித்தெடுப்புகள் மற்றும் பிற

பிரதியெடுப்பு தேவைப்பாடுகளையும் நிறைவேற்றும் நடவடிக்கை இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.



ஆராய்ச்சிப் பிரிவு



பொது மக்கள் தொடர்பாடல் பிரிவு

15. நூலகம்

தேசிய சுவடிகள் கூடத்தில் பல்வேறு தலைப்புக்களில் பெறுமதி மிக்க புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்று உள்ளது. வரலாறு, அரசியல், சமூகவியல், நாட்டுப்புறவியல்தினை, மானுடவியல், சட்டம், வெளிநாட்டு உறவுகள், இலக்கியம், காப்பகவியல் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய புத்தங்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. நூலகம் பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்படாவிட்டாலும், அத்தொகுப்பின் புத்தகங்கள் இரண்டாம் மூலாதாரமாகக் கொண்டு காப்பகத்தைப் பயன்படுத்தப்படுவதோடு, ஆய்வுக்காக தேவைப்படும் போது நூலகத்திலிருந்து ஆராய்ச்சி அறைக்கு எடுத்துச் செல்ல முடியும். இவ்வருடத்தில் 95 புத்தங்கள் ரூபா. 59,774 செலவில் கொள்வனவு செய்யப்பட்டதோடு, 15 புத்தகங்கள் பரிசாக கிடைக்கப் பெற்றன. அவ்வாறே 64 சஞ்சிகைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் பரிசாக கிடைக்கப் பெற்ற புத்தகங்கள்

விடயம்	**கொள்வனவு செய்யப்பட்ட எண்ணிக்கை**	**பரிசாக கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை**
சிங்களம்	35	03
அரசியல்	09	01
சமூகவியல்	11	--
நிர்வாகம்	04	--
சமயம்	14	05
சுயசரிதைகள்	22	06
மொத்தம்	**95**	**15**

16. புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்களை பதிவு செய்யும் பிரிவு

அச்சகங்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்படுள்ள அச்சகங்களில் அச்சிடப்பட்ட வெளியீடுகள், சஞ்சிகைகள், பத்திரிகைகளைப் பதிவு செய்தல் மற்றும் அதற்குரித்தான பதிவேடுகளை இற்றைப்படுத்துவதனைப் போன்றே பதிவு செய்யப்படாத வெளியீடுகளை தேடுவதற்காக புத்தக நிலையங்களைப் பரீட்சித்தல், அச்சகங்களைப் பரீட்சித்தல், அச்சிடப்பட்ட பொருட்கள் மற்றும் மாதாந்த வெளியீட்டுப் பத்திரங்களை அனுப்பாத அச்சகங்களுக்கு எதிராக வழக்குத் தொடரல் போன்ற பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

16.1 அச்சகங்களைப் பதிவு செய்தல்

அச்சக கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 178) இரண்டாவது பத்தியின்படி, 2018 ஆம் ஆண்டுக்கான புதிய அச்சகங்களைப் பதிவுசெய்வதற்காகப் பெறப்பட்ட சத்தியப் பிரமாணங்களின் எண்ணிக்கை 55 ஆகும். 2018 ஆம் ஆண்டில் 76 அச்சகங்கள் மூடப்பட்டுள்ளன. 2017.12.31 ஆந் திகதியின் கணிப்பீட்டின் படி 2536 அச்சகங்கள் இயங்கி வருகின்றன. 2018.12.31 ஆந் திகதிய நிலவரப்படி, நாட்டில் உள்ள மாவட்டங்களுக்கு ஏற்ப நாடு முழுவதும் உள்ள அச்சகங்களின் எண்ணிக்கை 2515 ஆகும். கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மாத்திரம் 415 அச்சகங்கள் நிறுவப்பட்டுள்ளதோடு, மாநகர எல்லைக்கு வெளியே கொழும்பு மாவட்டத்தினுள் 626 அச்சகங்களும், ஏனைய மாவட்டங்களில் 1471 அச்சகங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

16.2 அச்சகங்களைப் பரிசோதித்தல்.

கொழும்பு, களுத்துறை, கேகாலை, காலி, ஹம்பாந்தோட்டை, கம்பஹ, மாத்தறை, கண்டி, இரத்தினபுரி மற்றும் ஏனைய மாவட்டங்களில் உள்ள அச்சகங்களை திணைக்கள அதிகாரிகள் ஆய்வு செய்து அச்சக கட்டளைச்சட்டம், அச்சகங்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் கட்டளைச்சட்டம் மற்றும் செய்தித்தாள கட்டளைச்சட்டம் என்பன முறையாக அமுல்படுத்தப்படுகின்றதா என சரிபார்க்கின்றனர். . இந்த விசாரணைகளுக்கு அடிப்படை தகவல்களை வழங்குவதில் பொலிஸ் திணைக்களத்தின் உதவியை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

16.3 வெளியீடுகள்

அச்சகர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் கட்டளைச் சட்டத்தின் (179) ஆம் அத்தியாயத்தின் படி 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்வதற்கு கிடைக்கப்பெற்ற வெளியீடுகளின் எண்ணிக்கை 10,179 ஆகும். அந்த வெளியீடுகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு பதிவு செய்யப்பட்ட மொத்த புத்தகங்களின் எண்ணிக்கை 4046 ஆகும். பதிவு செய்யப்பட்ட

மொழியின்படி, சிங்களம் 3042 உம், தமிழ் 751 உம், ஆங்கிலம் 157உம் மற்றும் சிங்களம் / தமிழ்/ ஆங்கிலம் 96 புத்தகங்களும் மொத்தமாக 4046 புத்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

16.4 வார சஞ்சிகைகள்

இந்த வருடத்தில் 343 வார சஞ்சிகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மொழிகளின் படி 174 சிங்களம், 97 தமிழ், 27 ஆங்கிலம் மற்றும் 45 சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளில் 343 சஞ்சிகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

16.5 செய்தித்தாள்

செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 180) பத்தி 2 இன் கீழ் 2018 ஆம் ஆண்டில் 325 பத்திரிகைகள்பெறப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்ற செய்தித்தாள்கள் மொழியின் படி, சிங்களத்தில் 192 பத்திரிகைகளும், தமிழில் 81, ஆங்கிலத்தில் 48 மற்றும் சிங்களம் / தமிழ் / ஆங்கிலத்தில் 04 செய்தித்தாள்களும் மொத்தமாக 325 பத்திரிகைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

17. கண்டி கிளை

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் கண்டிக் கிளை ஹேமமாலி மாவத்தையின் பழைய நீதிமன்றக் கட்டிடத்தின் தளதா மாளிகையின் வளாகத்துடன் இணைந்த அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது.

17.1 பதவியணியினர்

கண்டி கிளை அலுவலகத்தில் உதவிச் சுவடிகள் காப்பாளர், சுவடிகள் காப்பாளர், மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் மூவரும் ட்படும் மீளாய்வுக்கு உட்படும் ஆண்டினுள் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள்.

- சுவடிக் காப்பாளர் லசிகா ஆரியரத்ன ஆந் திகதி முதல் தலைமை 2018.06.01 .அலுவலத்தில் இணைக்கப்பட்டுள்ளார்
- சுவடிகள் காப்பாளர் ஸ்ரீயாணீ ரணசிங்க ஆந் திகதி முதல் கண்டி கிளைக்கு 2018.06.04 .இணைக்கப்பட்டுள்ளார்
- அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதிஅனுஷா ராஜபக்ஷ அவர்கள் பிரவச விடுமுறை . .ஆந் திகதி முதல் மீண்டும் சேவைக்கு சமூகமளித்துள்ளார் 2018.02.02 முடிந்து

17.2 ஆவணங்களுக்கான சூசிகையைத் தயாரித்தல்

- *18 ஆவண வகுதிகள் (கண்டி மாவட்ட செயலகம்) 9712–10526 வரைக்கு சூசிகை தாயரித்தல்*
- *ஆவணங்களுக்கான இறுதி இலக்கங்களை இடல்*

ஆவண வகுதி இலக்கம்	**விபரம்**	**அளவு**
30	*கேகாலை மாவட்டச் செயலகம்*	*3206 – 3754*
34	*மாத்தளை மாவட்டச் செயலகம்*	*1891 – 3132*

- *ஆவணங்களின் சரிபார்ப்புப் பட்டியலை (Check List) எடுத்தல்*

ஆவண வகுதி இலக்கம்	**விபரம்**	**அளவு**
18	*கண்டி மாவட்ட செயலகம்*	*1 – 10526*
30	*கேகாலை மாவட்டச் செயலகம்*	*1 – 3754*

- *Location Guide தாயரித்தல்*

களஞ்சியம்	**ஆவண வகுதி**	**ஆவணங்களின் அளவு**
01	*78*	*1-5466*
	80	*1-788*
	83	*1-3936*
	245	*1-1464*
	276	*1-5300*
	305	*1-1141*
02	*18*	*1-6382*
		9090-9122
		9344-10256
	20	*1-1981*
	30	*1-3754*
	34	*1-2563*
	38	*1607-2991*
	69	*1-1402*

களஞ்சியம்	ஆவண வகுதி	ஆவணங்களின் அளவு
	220	2071-12083
	236	1-2224
03	18	6383-8992
		9123-9344
	21	1-175
	23	1-47
	83	3936-6610
	220	1-2070
	253.65	1-37
	அதிவிசேட வர்த்தமானிகள்	வருடம் 2007-2011
	சுற்றறிக்கை	1959-1970

- சூசிகளை கணனிமயப்படுத்தல்

ஆவண வகுதி இலக்கம்	விபரம்	அளவு
ஆவண வகுதி 30	கேகாலை மாவட்டச் செயலகம்	2255 – 2850
ஆவண வகுதி 18	கண்டி மாவட்ட செயலகம் தேடல் உதவிகள்	9345-10526
---	அமர்வு அறிக்கை சூசிகைகள்	வருடம் 1861-1978

17.3 நீதிமன்றத்துக்கு ஆவணங்களை சமர்ப்பித்தல்

கேகாலை மாவட்ட நீதிமன்றம், மாத்தளை மாவட்ட நீதிமன்றம், அவிஸ்ஸாவெல மாவட்ட நீதிமன்றம் மற்றும் கண்டி மாவட்ட நீதிமன்றத்துக்கு ஆவணங்கள் மற்றும் பிரித்தெடுப்புக்களைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

17.4 ஆவண ஆய்வுகள் மற்றும் செயலமர்வுகள்

கடுகன்னாவ நகர சபை, கண்டி நகர சபை, ககவட கோரலை பிரதேச செயலகம் மற்றும் வத்தேகம நகர சபை போன்ற நிறுவனங்களில் ஆவண ஆய்வுகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆவணம் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சித் திட்டங்கள் - கண்டி மாவட்ட செயலகம் (சுவடிக் காப்பாளர் திணைக்களத்தின்

தொழிற்பாடுகள் மற்றும் சட்டதிட்டங்கள்) போன்ற செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கொழும்பு அலுவலகத்தில் நடைபெறும் ஐந்து நாட்களைக் கொண்ட பாடநெறி விரிவுரையொன்று (சுவடிகள் காப்பாளர் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்) நடாத்தப்பட்டது.

17.5 பொது மக்கள் விசாரணைகள்

- வெளியிடப்பட்ட ஆவணங்களின் அளவு

விண்ணப்ப வகை	விண்ணப்பித்த அளவ	வழங்கப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை
மரபு வழிப் பங்கு (S.T.R)	97	57
தானிய குத்தகை (G.T.R)	12	02
விகாரை மற்றும் தேவாலயங்களின் காணி ஆவணங்கள் (T.L.R)	48	17
ஆணையாளர் அறிக்கைகள் (T.L.C.P)	12	04
காப்புரிமைப் பட்டயம்	24	11
அரசின் வர்த்தமானிகள்	56	29
சட்டம்	23	09
வரைபடங்கள்	05	01
உள்நாட்டு விசாரணைகள்	106	95
வெளிநாட்டு விசாரணைகள்	11	09

- ஆராய்ச்சிக்காக வந்த ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை 99 -
- வருகை தந்த வாசகர்கள் 462 -
- பயன்பாட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அளவு 819 -

17.6 சுவடிகள் எண்வரிசைப்படுத்தல்

2018 ஆம் ஆண்டில் கண்டி கிளையில் முதற்தடவையாக ஆவண எண்வரிசைப்படுத்தும் அறையொன்று நிறுவப்பட்டுள்ளதோடு அதில் பெறுமதியான ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு எண்வரிசைப்படுத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

18. சட்டத் தொகுப்பு

1885 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அச்சிடுவோர் மற்றும் வெளியீட்டாளர் தொடர்பான கட்டளைச் சட்டத்தை திருத்தியமைக்கும் செயற்பாடு 2018 ஆம் அண்டு மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகள் தேசிய நூலகத்துடன் இடம்பெற்றது.மேலும், தேசிய நூலக ஆலோசனை குழுவினால் திருத்தத்திற்கான

பரிந்துரைகள் வழங்குவதற்காக தேசிய நூலகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. டப். சுனில், தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நதீரா ரூபசிங்க மற்றும் தேசிய நூலகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் திரு. உபாலி அமரசிரி அவர்கள் உள்ளிட்ட மூவரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

19. பொதுவான விடயங்கள்

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம் தேசத்தின் எழுத்துரிமையைப் பாதுகாத்து அரச மற்றும் பொது மக்களின் தேவைக்கேற்ப தகவல்களை வழங்கும் ஒரு அரச நிறுவனமாகும்.

தேசிய சுவடிகள் கூடத்தின் பிரதான நோக்கமான அரச ஆட்சியாளர்களினால் கடந்த காலத்திலிருந்து உருவாக்கப்பட்டு வந்த முக்கியமான ஆவணங்களைப் பராமரித்து பாதுகாத்து வைத்து அரச ஆளுகையைப் போன்றே மக்களின் தேவைக்கும் ஏற்ப அவசியப்படும் தகவல்களை வழங்குதல். அதற்கமைய, இவ்வருடத்தில் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பல்வேறு தொழிற்துறை சார்ந்தவர்களைப் போன்றே வெளிநாட்டவர்களுக்கும் அவசியப்படும் தகவல்களை வழங்கி பயன்பாட்டாளர்கள் 3163 பேருக்கு ஆராய்ச்சி வசதிகளை வழங்க முடியுமாக இருந்தமை தேசிய சுவடிகள் கூடம் ஆய்வாளர்களுக்கு ஒரு சிறப்பான இடமாக அமைந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றது. திணைக்களத்தின் குறைந்தபட்ச வசதிகள் மற்றும் குறைந்தபட்ச ஊழியர்களால் இத்தகைய அதிகபட்ச சேவையை வழங்குவதற்கான முயற்சியில் திணைக்கள ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட ஒத்துழைப்பு மகத்தானது. களஞ்சியத்தின் பணிகளில் கடந்த ஆண்டுகளை விட வெற்றிகரமான செயல்பாடுகள் மேற்கொள்ள முடிந்தமையிட்டு பாராட்டப்பட வேண்டிய விடயமாக உள்ளது.

29 அரச நிறுவனங்களின் பதிவேடுகளை ஆய்வு செய்தல் மற்றும் ஆவணங்களை பாதுகாத்தல் மற்றும் அகற்றுதல் மற்றும் தேசிய காப்பகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து அரச நிறுவனங்களுக்கு விழிப்பூட்டல் மூலம் இந்த ஆண்டு 6997 மூல ஆவணங்கள் மற்றும் வெளியீடுகளை அரச நிறுவனங்களில் இருந்து இணைக்கப்பட்டுள்ளமை நாம் பெற்ற வெற்றிகரமான படியாகும்.

திணைக்களத்தில் அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிலவுதல், தொழில்முறை இலக்குகளை அடைவதற்கு தடையாக அமைந்துள்ளது. ஆட்சேர்ப்பு நடைமுறை மேற்கொண்டு சிறிது காலம் ஆவதால், ஓய்வு பெற்றுச் செல்கின்ற உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக ஏற்படும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப முடியாமல் போனது வேதனைக்குரிய விடயமாகும். தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப மீள்கட்டமைக்கப்படும் பணிகளை முழுமைப்படுத்தமுன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. மேலும், இதற்காக நிரல் அமைச்சுக்களில் இருந்து கிடைக்கப்பெற்ற பெறுமதியான ஒத்துழைப்பு மற்றும் சம்பளம் மற்றும் ஆளனி ஆணைக்குழுவினதும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் கிடைக்கப்பெற்ற ஆதரவுகளுக்கு முன்கூட்டியே நன்றி தெரிவிக்க வேண்டும். 08 ஆம்சேர்ப்பு நடைமுறைகள் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, 2019 ஆம் ஆண்டில் பல பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் பிரதான கட்டிடத்தில் உள்ள சிதைந்த கான்கிரீட் கூரைகளை கழற்றி அகற்றி சரிசெய்தல் மற்றும் மத்திய காற்றுப்பதனாக்கம், தீயணைத்தல் மற்றும் உயர் பாதுகாப்பு அமைப்புகளை நிறுவுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2018.01.07 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத் தீர்மான இலக்கம் அமை/17/2988/742/050 இன் மூலம்

கிடைக்கப்பெற்றுள்ளதோடு வேலை ஒப்படைப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஏப்ரல் மாதத்தில் 25கிரீட் கூரைகள் திடீரென உடைந்து கீழே விழுந்தது. சிதைந்த கொன்கிரீட் கூரைகளை கழற்றி அகற்றி விட்டு கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்வதனை துரிதப்படுத்தி ஆரம்பிக்க ஏற்பட்டிருப்பினும் ஒருசில நிரல் அமைச்சுக்கள் மாற்றம் அடைந்ததன் காரணமாக முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை திருத்தியமைப்பதற்கு ஏற்பட்டுள்ளது. அதனால் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தத்தை வழங்க தாமதமடைந்துள்ளதுடன், 2018.12.26 ஆந் திகதி அரச சார்பு நிறுவனமான பொறியியல்சார் நடவடிக்கைகள் குறித்து மத்திய ஆலோசனைப் பணியகத்துக்கும் (CECB) அப்பணியகத்தின் முழு உரிமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அதனுடன் இணைந்த நிறுவனமான வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியலாளர் சேவை தனியார் நிறுவனத்திற்குரிய (CESL) பணிகளுக்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதோடு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தினால் சேவை பெறுநர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை எதிர்வரும் காலங்களிலும் அதிகபட்ச அளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இங்கு குறிப்பிடுவதற்கு விரும்புகிறேன்.

கலாநிதி நதீரா ரூபசிங்க

தேசிய சுவடிகள்கூடப் பணிப்பாளர் நாயகம்